## 2. மாநிலத் திட்டக் குழு பிரிவு அமைத்தற்கான செயல் முறை ஆணை

### உறுப்பினர் செயலர், மாநில திட்டக்குழு, ஆணைகள் சென்னை - 600 005
### அவர்களின் செயல்முறைகள்

### முன்னிலை :- டாக்டா இரமேஷ் சந்திர பண்டா இ.ஆ.ப.

செ.மு.எண் : 4871 / மா.தி.கு./ மா.தி/96 நாள் : 7-10-96

பொருள் :- **உள்ளாட்சி அமைப்புகள் - அதிகாரங்கள் ஒப்படைப்பு - மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களை கொண்ட பணிக்குழு அமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது**

பார்வை :- **அரசுச் செயலர், ஊரக வளர்ச்சித் துறை அவர்களின் நே. மு. கடித எண். 20099 / சி1 /96 - 8 நாள் 20.9.1996.**

ஆணை

மூன்றடுக்கு முறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளான மாவட்ட ஊராட்சி, வட்டார அளவிலான ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் 96ம் மாதத்தில் நடைபெறும். மேலும் புதிய அமைப்புகள் அக்டோபர் '96-ம் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் பொறுப்பேற்கும் என்றும் பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. அரசு மேற்கண்ட மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கி ஆணைகள் வெளியிட எண்ணியுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு சம்பந்தமாக முடிவு செய்வதற்கு ஏதுவாக மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களைக் கொண்ட பணி குழு ஒனறினை அமைத்து கீழ்க்கண்ட விபரங்கள் குறித்து பரிந்துரைகள் செய்யுமாறு அரசு மாநிலத் திட்டக் குழுவினை கேட்டுக் கொண்டது.

1) ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் ஒப்பபுடைச் செய்தல் மற்றும்

2) ஊராட்சிகளின் பங்கு, கடமைகள் மற்றும் பணிகள் குறித்து அவைகளுக்கு ஏற்ற அதிகார ஒப்படைப்பு செய்தல்

02) மேற்கண்ட பொருள் குறித்து, 1996, செப்டம்பர் 27, அன்று நடைபெற்ற மாநிலத் திட்டக் குழு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்க முடிவு செய்து அக்குழுவில் கீழ்கண்ட உறுப்பினர்கள் இருப்பர் என்றும் அக்குழு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் (1) மற்றும் (2) ன் மீதான தகுந்த பரிந்துரைகளை அரசுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது.

1) **திரு. எல். சி. ஜெயின்**
உறுப்பினர், மாநிலத் திட்டக் குழு. — தலைவர்.

2) **திரு. டி. வி. அந்தோணி**, இ.ஆ.ப
உறுப்பினர், மாநிலத் திட்டக்குழு — (ஓய்வு)

3) திரு. **கே. வி. பழநிதுரை**
முழுநேர உறுப்பினர்
மாநிலத் திட்டக் குழு **உறுப்பினர்**

4) **டாக்டர் இரமேஷ் சந்திர பண்டா**, இ.ஆ.ப
உறுப்பினர் செயலர்
மாநிலத் திட்டக் குழு **அமைப்பாளர்**

5) **அரசு செயலாளர்** **சிறப்பு அழைப்பாளர்**
ஊரக வளர்ச்சித் துறை

மேற்கண்ட குழுவிற்கு குழுமத் தலைவர் (மாவட்டத் திட்டம்) மற்றும் குழுமத் தலைவர் (ஊரக வளர்ச்சி) தேவையான உதவிகள் செய்வார்கள்.

03 இக்குழுவின் பரிந்துரைகளை, மாநில திட்டக் குழு கூட்டத்தில் பரிசீலித்த பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களது தலைமையில் நடைபெறும் மாநிலத் திட்டக் குழு கூட்டத்தின் முடிவுக்கு வைக்க வேண்டும்.

04. பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள படி இவ்வறிக்கையினை மாநிலத் திட்டக் குழு அரசுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக குழு ஒரு மாத காலத்திற்குள் தன்னுடைய அறிக்கையினை அளிக்க வேண்டும்.

**(ஒ.ம்) இரமேஷ் சந்திர பண்டா**
**உறுப்பினர் செயலாளர்**
நாள் : 7-10-96

பெறுநர்

உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள்
அனைவருக்கும்